NUS
National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p1
**Date:** 20 July 2018

# ‘பன்முகத்தன்மையில் உறுதியான கடப்பாடு’

உலகின் பல பகுதிகளில் பிரிவினைவாதம் தலைதூக்கிவரும் நிலையில் பன்முகத்தன்மையை நிலைநிறுத்துவதிலும் சகிப்புத்தன்மையை வளர்ப்பதிலும் பாகுபாட்டை வேரறுப்பதிலும் சிங்கப்பூர் தனது உறுதியான கடப்பாட்டை வெளிப்படுத்தவேண்டும் என்று தொடர்பு, தகவல் அமைச்சர் எஸ்.ஈஸ்வரன் அறைகூவல் விடுத்துள்ளார்.

இன அடையாளம், கலாசாரம் தொடர்பில் கொள்கை ஆய்வுக் கழகமும் ஒன்பீப்பிள்.எஸ்ஜி அமைப்பும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த ஒரு கருத்தரங்கில் கலந்துகொண்டு பேசிய திரு ஈஸ்வரன், சிங்கப்பூர் தனது ‘பல கலாசாரத் திட்டத்தை’ கட்டமைக்கும் வழிகளில் இதுவும் ஒன்று என்றார்.

ஒவ்வொரு சிங்கப்பூரரும் தங்களது இன அடையாளத்தைக் கடந்த, ‘பல இன, சமய, கலாசாரம் தங்களின் உடைமை’ எனும் உணர்வை விதைக்க வேண்டும் என்றும் பிற இன சிங்கப்பூரர்களிடத்தில் ஆழ்ந்த பற்றுதலையும் உண்மையான ஆர்வத்தையும் வளர்க்கவேண்டும் என்றும் அமைச்சர் ஈஸ்வரன் கேட்டுக்கொண்டார்.

சமுதாய அளவில், பல இன, கலாசாரக் குழுக்கள் சிறந்த முறையில் கலந்துறவாடுவதை சிங்கப்பூர் ஊக்குவிக்க வேண்டும் என வலியுறுத்திய அவர், அதன் மூலம் மக்கள் இன, மொழி அல்லது சமயம் பாராது பிறருடன் இயற்கையிலேயே வலுவான பிணைப்பை உருவாக்கிக்கொள்ள முடியும் என்றும் சொன்னார்.

இன உறவுகள் தொடர்பில் 2016ஆம் ஆண்டில் ‘ஐபிஎஸ்’ அமைப்பும் சேனல்நியூஸ்ஏஷியாவும் இணைந்து மேற்கொண்ட ஓர் ஆய்வில், எல்லா இனத்தவர்களும் சமமாக நடத்தப்பட வேண்டும் என்று கிட்டத்தட்ட எல்லா சிங்கப்பூரர்களும் கருதுவதை அவர் சுட்டிக்காட்டினார்.

அதே நேரத்தில், ஆய்வில் பங்கேற்றோரில் 60 விழுக்காட்டினர் இனரீதியான கருத்துகளையும் கேட்டதாகத் தெரிவித்தனர். 40 விழுக்காட்டினருக்கும் மேற்பட்டோர் மற்ற இனத்தவர் மீது எதிர்மறை எண்ணங்களைக் கொண்டு இருந்ததும் அந்த ஆய்வின்மூலம் தெரியவந்தது.



> பல கலாசார நாடாக நாம் சாதித்ததை எண்ணிப் பெருமிதம் கொள்ளும் அதே வேளையில் அப்பணி முடிந்துவிட்டது என ஊகிப்பதோ அல்லது மெத்தனமாக இருப்பதோ கூடாது.
>
> **அமைச்சர் எஸ் ஈஸ்வரன்**

“பல கலாசார நாடாக நாம் சாதித்ததை எண்ணிப் பெருமிதம் கொள்ளும் அதே வேளையில், அந்தப் பணி முடிந்துவிட்டது என ஊகம் கொள்ளவோ, மெத்தனமாக இருக்கவோ கூடாது,” என்றார் திரு ஈஸ்வரன்.

வலுவான இன, தேசிய அடையாளத்தைப் பேணுவதில் தனிமனிதத் திறன் குறித்துப் பேசிய போது, அதில் சிங்கப்பூர் குறிப்பிடத்தக்க அளவு சிறப்பாகச் செய்து வருவதாக அவர் குறிப்பிட்டார்.

கடந்த ஆண்டு ‘ஐபிஎஸ்’ஸும் ‘சிஎன்ஏ’வும் இணைந்து மேற்கொண்ட இன்னோர் ஆய்வையும் அமைச்சர் சுட்டிப் பேசினார்.

அந்த ஆய்வில் பங்கெடுத்தோரில் 49 பேர் தங்களது இன அடையாளத்தையும் சிங்கப்பூரர் அடையாளத்தையும் சேர்த்தே குறிப்பிட்டனர்.

ஒப்புநோக்க, 35 விழுக்காட்டினர் சிங்கப்பூரர் என்ற அடையாளத்தையும் 14 விழுக்காட்டினர் தங்களது இன அடையாளத்தையும் முதன்மைப்படுத்தி இருந்தனர்.

“ஆதலால், சிங்கப்பூரர் எனும் வலுவான அடையாளத்துடன் கூடிய இளம் நாடாக இருக்கும் நாம் நமது ஆழ்ந்த இன, கலாசார மூலங்களை விட்டுவிடத் தேவை இல்லை. உண்மையில், நமது அந்த இரு அடையாளங்களும் ஒன்றையொன்று சார்ந்து, ஒன்றில் இருந்து ஒன்று ஆற்றலைப் பெறுவதாக இருக்க வேண்டும்,” என்று அமைச்சர் மேலும் சொன்னார்.

கடந்த ஆண்டு இடம்பெற்ற அந்த ஆய்வில் பங்கெடுத்தவர்களில் பெரும்பான்மையோர், மற்ற இனத்தவரின் உணவு வகைகளைச் சுவைத்து மகிழவும் அவர்களின் மொழிகளைக் கற்று அறியவும் விரும்புவதாகத் தெரிவித்திருந்தனர்.

ஆனால், நடைமுறையில் கலாசாரங்களுக்கு இடையிலான அத்தகைய பரிமாற்றமும் ஈடுபாடும் குறைவாக இருப்பதை திரு ஈஸ்வரன் சுட்டிக்காட்டினார்.

“இதனால்தான், நமது கொள்கைகள் பல இன, சமயப் பின்னணிகளைக் கொண்ட மக்களுக்கு இடையிலான தொடர்பை, புரிதலை, சமூகக் கலந்துறவாடலை வளர்த்திடப் பொருத்தமானதாகவும் முக்கியமானதாகவும் திகழ்ந்து வருகின்றன,” என்றார் அவர்.

சிங்கப்பூரர்கள் ஒவ்வொரு நாளும் பன்முகத்தன்மைமிக்க சூழலில் மூழ்கி, ஒவ்வொருவரும் மற்றவரின் கலாசாரத்தைப் பற்றி அறிந்துகொள்வதில் ஆர்வமிக்கவராக இருப்பதை உறுதிசெய்ய வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.